# சிறுவர் அமுதம்

19.03.95

கிண்ணம் 5 எண்ணம் 11



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder freundliches Magazin

ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒரு சொற் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்
— மகாகவி சுப்பிரமணிய பாரதியார் —



அன்புச் சிறுவர் சிறுமியரே...

வெளிநாட்டில் வாழ்ந்து வரும் உங்களுக்கு எல்லாமே இருக்கின்றன. உணவு, உடை, உல்லாச வாழ்க்கை எல்லாமே கிடைக்கின்றன. அப்பாவும் அம்மாவும் உங்களது ஆசைகளைப் பூர்த்தி செய்கிறார்கள். உலகமே இன்பமயமாக உங்களுக்குத் தெரிகிறது. சொந்தநாட்டை நினைத்துப் பாருங்கள். உங்கள் வயதொத்த சிறுவர்கள் தொடர்ந்த யுத்தத்தால் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள்?

யுத்தத்தால் அநாதைகள் ஆனவர்கள். உடல் உறுப்புகளை இழந்தவர்கள், ஒரு நேரச் சாப்பாட்டுக்கே கஷ்டப் படுபவர்கள், யுத்தத்தால் ஏற்பட்ட அசுத்தக் காற்றால் நோயுற்றவர்கள்தான் எத்தனை? பாடசாலைகள் அங்கு சீரழிந்துள்ளன. வசதி படைத்தவர்கள் மட்டுமே தாங்கள் இயன்ற

அளவுக்குப் படிக்கிறார்கள். ஆனால் மற்றவர்கள்? இங்கிருக்கும் நாங்கள் ஜேர்மன் மொழியில் கல்வி கற்கின்றோம். இந்த நாட்டில் வாழும் நாங்கள் இந்த நாட்டு மொழியைக் கற்றுக் கொள்வது அவசியமே.

ஜேர்மன் மொழிக் கல்வி எமது அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் தொழில் முறைக் கல்வியாகவுமே இருக்கின்றன. ஜேர்மன் மொழி மட்டுமல்ல அன்னிய மொழிகள் எத்தனையை வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம். கற்றுக் கொண்டவையை மற்றவருக்கு புரிய வைக்கலாம். கற்றவற்றை மற்றவருக்கு புரிய வைக்காவிடில் கல்வி கற்பதில் அர்த்தமேயில்லை.


இதனால் தாய்மொழிக் கல்வி அத்தியாவசியமாகின்றது. நமது தாய்மொழியும் நமது பண்பாடும் ஐரோப்பிய வாழ்க்கையிலும், ஐரோப்பிய நாகரீகத்தாலும் அழிந்து விடும் நிலைக்குப் போய்விடுவது நல்லதல்ல. வெளிநாட்டு நாகரீக மோகத்தால் இங்கும், தொடர்ந்த யுத்தத்தால் நம் தாய்நாட்டிலும் தாய்மொழி அழிந்து விடக்கூடாது. தாய் நாட்டை மறப்பதும், தாய்மொழியை மறப்பதும் பெற்ற தாய், தந்தையை மறப்பது போலாகும்.

அது மட்டுமல்ல, உதாரணமாக ஜேர்மனியில் இருப்பவர் ஜேர்மன் மொழியையும், இதேபோல் மற்றைய ஐரோப்பிய நாடுகளில் வாழ்பவர்கள் அந்தந்த நாட்டு மொழியை படிப்பதால் அந்த நாட்டிலுள்ள தமிழர்களோடு பேசிக்கொள்ளலாம். ஆனால் உறவினர்களோ ஐரோப்பிய நாடுகளில் பரந்து வாழ்கிறார்கள். நீங்கள் ஒன்றாகச் சந்திக்கும் வேளைகளில் எந்த மொழியில் பேசிக்கொள்வீர்கள்? நீங்கள், நீங்களிருக்கும் நாட்டு மொழியையும் அவர்கள், அவர்களிருக்கும் நாட்டு மொழியையும் பேசினால் உங்களால் புரிந்து கொள்ள முடியுமா? இதற்காகவாவது ஒரு பொது மொழி வேண்டும். அதற்கு எமது தாய்மொழியை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமானது. எந்த விடையத்தையும் அந்நிய மொழியில் விளங்கிக் கொள்வதை விட தாய்மொழியில் விளங்குவது எளிது.

இதனால சின்னவர்களாகிய நீங்கள் உங்கள் பெற்றோர்களிடமோ அல்லது தமிழ்ச் சஞ்சிகைகள் மூலமோ அல்லது வேறு ஆசிரியர்கள் மூலமோ தமிழறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

ஆசிரியை.

# யானை



பூமியில் கிட்டத்தட்ட 45 மில்லியன் வருடங்களுக்கு முன் முதலாவது யானையினம் வாழ்ந்தது. இவை 60 சென்ரிமீற்றர் உயரமாகவும் தும்பிக்கை, தந்தம் என்பன இன்றியும், மிகச்சிறிய காதுகளுடனும் வாழ்தன. இச்சிறிய இனத்தை Moeritherium என ஆராய்ச்சியாளர்கள் பெயரிட்டுள்ளனர்.

பின்பு இவ்வினத்தில் 600க்கு மேற்பட்ட தும்பிக்கையையுடைய இனங்கள் பூமியில் வாழ்ந்தன. அநேகமானவை பெரியவையாகவும், நீண்ட தந்தங்களும், நீண்ட தும்பிக்கையையுடையனவாக வாழ்ந்தன. சில சிறியனவாகவும், சிறிய தந்தங்களையுடையனவாகவும் வாழ்ந்தன. ஆனால் இவ்வினங்கள் அழிந்து விட்டன.

யானை ஒரு பாலூட்டியினமாகும். யானையும் காட்டில் கூட்டாக வாழுகின்ற மிருகங்களில் ஒன்றாகும். இவைகளை மக்களும் தம் வேலைகளைச் செய்வதற்குப் பயன் படுத்துகிறார்கள். இன்று பொதுவாக யானைகள் உருவத்தில் பெரியனவாகவும், இரண்டு தந்தம் உடையனவாகவும், பெரிய காதுகளுடையனவாகவும், உடம்பில் மயிர்கள் அற்றனவாகவும (சிறியதாக இருக்கும் போது மட்டும் மயிர் இருக்கும்) ஆப்பிரிக்கக்கண்டத்திலும் அசியக் கண்டத்திலும் வாழுகின்றன.

இவையுடைய உடல் பெரிதாக இருந்தாலும் மணித்தியாலத்திற்கு 38 கிலோமீற்றர் வேகமாக ஓடக்குடியவை. தும்பிக்கை யானையின் நீண்ட மூக்கும் அதேவேளையில் கையுமாகும். இது தனது தம்பிக்கையால் மிகச் சிறிய ஊசியையும் எடுக்கக் கூடியது.

யானையின் தந்தங்கள் விஷேடமான பற்கள் ஆகும். இவைகள் கடைவாயினூடாக வெளியே நீட்டிக் கொண்டிருக்கின்றன.

இவைகள் 3.5 மீற்றர் நீளமாகவும் கிட்டத்தட்ட 200 கிலோகிராம் நிறையுடனும் இருக்கின்றன. யானையின் ஆயுட்காலத்தில் ஆறுதடவை அதற்குப் பற்கள் விழுந்து முளைக்கின்றன. யானையின் ஆயுட்காலமும் அதன் பற்களின் வாழ்க்கைக்காலமும் ஒன்றையொன்று சார்ந்தவை. யானைக்கு ஆறாவது தடவை பல் முளைக்கும் போது அதற்க அறுபது வயது ஆகிறது. அதுவே அதனது கடைசிக் காலமும் ஆகிறது.

யானைகளின் தோல் தடிப்பானது. ஆனாலும் கிருமிகளால் துளைக்கக்கூடியது. யானைத்தோலை பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக மண்ணை உடம்பில் அள்ளி வீசுகிறது. இதனை விடச் சேறான இடங்களில் விழுந்து உருளுவதும் உண்டு. இதனால் சேறு தோலில் பட்டையாக ஒட்டிக்கொள்கிறது. இச்செயலை யானை தனது தோலை கிருமியின் தாக்கத்திலிருந்து காப்பதற்காகவே செய்கின்றது. யானை ஒரு நாளைக்கு 3அல்லது 4 தடவைகள் குளிக்கின்றது. வெப்பம் அதிகமான நாட்களில் வெப்பத்திலிருந்து தன் தோலைக் காக்கவே அடிக்கடி குளிக்கிறது.

யானை கூட்டுறவு வாழ்க்கையில் விருப்புடையது. தன்னினத்தோடு மட்டுமல்லாமசல் மனிதர்களுடன் சேர்ந்து கூட்டுறவாக வாழும் சிறந்தபண்பைக் கொண்டது. இது மனிதர்களைப் போலவே அன்பு, பாசம் போன்ற உணர்வுகளுக்கு அடிமையானது. உதாரணமாக இது தன் குட்டியின் இறப்பினால் வேதனை கொண்டு காட்டில் சுமார் 3 மாதகாலம் வரைக்கும் அட்டகாசம் செய்துகொண்டே திரியும். இதற்கு இதற்கு ஞாபகசக்தி அதிகமானதால் தனக்கு ஏற்படும் துன்பங்களை இலகுவில் மறந்துவிடுவதில்லை. யானைகள் கூட்டம் கூட்டமாக வாழ்வதினால் அக்கூட்டத்திலிருந்து ஒரு யானை பிரிந்தால் அதனை மீண்டும் தனது கூட்டத்தில் சேர்த்துக்கொள்ள மாட்டாது.இது மனிதர்களுடன் சேர்ந்து வாழ்ந்தாலும் மனிதர்கள் செய்கின்ற தீமைகளை இலகுவில் மறந்துவிடாது வஞ்சம் தீர்க்கும் தன்மைகொண்டதுயானை தன் மனஉணர்வுகளை ரீங்காரம், ஆரவாரம், உறுமல், பிளிறல் போன்ற செயல்கள் மூலம் வெளிப்படுத்துகின்றது.

பொதுவாக ஆண்யானைகளை காளை அல்லது எருது எனவும் பெண்யானையைப் பசு எனவும் இளம் பருவத்தை கன்று அல்லது குட்டி எனவும் கூறுவர். தமிழ் இலக்கியங்களில் ஆண்யானைக் கரி எனவும் பெண்யானைப் பிடி எனவும் குட்டியைக் குருளை எனவும் கூறப்படுகிறது.


யானை வாழுகின்ற சூழல் வெப்பமானது. அதனுடைய இரத்த அமைப்பும் சூடானது. இவ் இரத்தத்தைக் குளிர்மைப்படுத்துவதற்கு அதன் பெரிய காது பயன்படுகிறது. அதன் காதில் பீப்பா போன்ற வடிவில் ஒரு அமைப்பு உளது. உடம்பில் ஓடுகின்ற இரத்தம் ஒரு ஒழுங்கின் அடிப்படையில் காதில் இருக்கின்ற பீப்பாவுக்கு வருகின்றது. இவ்விரத்தத்தை காதை வீசுவதன் மூலம் குளிரடையச் செய்கின்றது. குளிரான இரத்தம் உடம்புக்குச் செல்ல மீண்டும் சூடான இரத்தம் இப்பீப்பாவுக்கு வருகின்றது. பெரிய காதின் மூலம் கூடியளவு இரத்தத்தை மிக விரைவாக குளிராக்கவும் முடிகிறது.இரத்தத்தை குளிராக்கவே யானை அடிக்கடி காதை வீசுகின்றது. சூழலின் வெப்பம் காரணமாகவே ஆபிரிக்கா யானைகளுக்கு காதுகள் பெரிதாகவும் ஆசியாவில் வாழுகின்ற யானைகளுக்கு காது சிறிதாகவும் காணப்படுகின்றது.

யானைகளின் உடலமைப்பைக் கொண்டு யானைகளை ஆசிய (இந்திய) யானைகள் எனவும், ஆபிரிக்க யானைகள் எனவும் இரண்டு வகைகளாகப் பிரிப்பர். ஆசிய அல்லது இந்திய யானைகள் உடலமைப்பு, பருமன், ஆகியவற்றில் ஆபிரிக்கா யானைகளை விடச் சிறியன. ஆண்யானைகள் கிட்டத்தட்ட 2.75மீற்றர் உயரமும், 4500 கிலோகிறாம் நிறையும் உடையன. தலையில் இரு மேடுகளை உடையன. ஆபிரிக்க யானைகளை விட காதுகள் சிறியன. இவைகளின் தோல் வழுவழுப்புடன் மென்மையானவை. காரணம் இவைகள் வாழும் பிரதேசங்கள் ஆபிரிக்க யானைகள் வாழும் பிரதேச வெப்பத்தையும், வரட்சியையும் விடக் குறைவானது. இந்திய யானைகளில் ஆண்யானைக்கே மட்டும் தந்தம் இருக்கின்றது. இந்திய யானைகளின் தும்பிக்கை மேல், கீழ்ச் சொண்டுகளைக் கொண்டது. இந்திய யானைகள் கிட்டத்தட்ட 80 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன.

ஆபிரிக்க யானைகள் பெரியகாதுகளையும், தலையில் மேடுகள் இன்றியும் காணப்படுகின்றன. ஆபிரிக்க ஆண் பெண் யானைகள் இரண்டும் தந்தங்களைக் கொண்டிருக்கின்றன. ஆபிரிக்க ஆண்யானையின் உயரம் 3.66 மீற்றர். கிட்டத்தட்ட 10.000 கிலோகிறாம் நிறையையும் உடையன.ஆபிரிக்க யானையின் ஒரு காது கிட்டத்தட்ட 50 கிலோகிறாம் நிறையையுடையன. ஆபிரிக்க யானையின் தோல் தடிப்பமானதுடன் கரமுரடானது. இவற்றின் வாழ்க்கைக்காலம் கிட்டத்தட்ட 60 ஆண்டுகளாகும். ஆபிரிக்கயானைகளின்

காது பெரியதாக இருப்பதற்குக் காரணம் அவைகள் வாழும் பிரதேசத்தின் வெப்பமும், வரட்சித்தன்மையுமாகும். ஆபிரிக்க யானைகளின் தும்பிக்கையில் மேலேயும் கீழேயும் ஒவ்வொரு விரல்கள் காணப்படுகின்றன.

யானையின் முக்கியமான உணவு புல் ஆகும். ஆனாலும் இலை, மரப்பட்டைகள், மரவேர்கள், பழங்கள், தானியவகைகள், பாண், வைக்கோல்,



கரும்பு போன்ற நூற்றுக்கு மேற்பட்ட உணவுவகைகளை உண்ணுகின்றது. யானை தன் உடலுக்கு தேவையான உணவினை விட இரண்டுமடங்கு அதிகமாகவே உண்ணுகின்றது. யானையின் உடலுக்கு வேலையில்லாவிடின் அது உண்ட உணவு சமிபாடடைவது மிகவும் கடினமானது. ஒரு யானை ஒருவருடத்திற்கு கிட்டத்தட்ட

1. 70.000 லீற்றர் தண்ணீரை குடிக்கின்றது.
2. 45.000 கிலோகிறாம் வைக்கோலைத் தின்னுகின்றது.
3. 5400 கிலோகிறாம் பச்சைப்புல் தின்னுகிறது.
4. 6800 லீற்றர் கனிஉப்புக்கள், உயிர்ச்சத்துக்கள், தாதுப்பொருட்கள் போன்றவற்றை உண்கிறது.
5. 3000 கோவாக்கள், ஆப்பிள், கரட்கிழங்குகள, போன்றவற்றுடன் பழங்கள்,காய்கள் என்பவற்றை உண்ணுகின்றது.

இந்த அளவீடுகளானது யானையைக் கட்டித் தீனி போட்டது போல என்ற தமிழ் பழமொழி சான்றாகின்றது.

(இத்தகவல்கள் யாவும் Faszination Tier எனும் புத்தகத்திலிருந் எடுக்கப்பட்டது. )

# சிக்கனம்



உதயணன் என்ற பெயருடைய வயோதிபர் ஒருவர் கிராமத்தில் வாழ்ந்து வந்தார். அவருடைய மகன் இறந்து விட்டதால் பேரப்பிள்ளைகளான நம்பியையும் மயனையும் அவரே வளர்த்து வந்தார். இருவரையும் எந்தவொரு குறையும் இல்லாது இரட்டைப்பிள்ளைகளைப் போலக் குறைவில்லாது வளர்த்தார். மூத்தவன் நம்பி. இளையவன் மயன்.

இருவருக்கும் உரிய வயதில் திருமணமும் செய்து கொடுத்தார். நம்பி நகரத்துப் பெண்ணையும் மயன் கிராமத்துப் பெண்ணையும் விரும்பித் திருமணம் செய்தனர். சொத்துக்களையும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தார் உதயணன். பின் எல்லாப் பொறுப்புகளிலும் விலகி கோயில், யாத்திரை என்று கிளம்பி விட்டார்.

இரு குடும்பத்தவர்களும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். நகரத்துப் பெண்ணான நம்பியின் மனைவி ஆடம்பரமாக வாழ்க்கை வாழ்ந்து வந்தாள். மயனின் மனைவியோ சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தினாள். ஓரளவு பணமும் சேர்த்து வைத்திருந்தாள். நம்பியின் குடும்பமோ ஆடம்பரச் செலவுக்காக சொத்துக்களை விற்க எண்ணினர். அந்த வேளையில் மயன் தடுத்தான்.

தனக்கு அவசரமாகப் பணம் வேண்டுமென்றும், கடனாகப் பணம் தருமாறும் தனது தம்பியிடம் நம்பி கேட்டான். வயலில் நெல் பயிரிடுவதற்கான பணம் இருக்கிறதென்றும், அந்தவேளையில் பணத்தைத் தருமாறும் மயன் அண்ணனிடம் சொல்லிப் பணத்தைக் கொடுத்தான். நம்பியும் ஒப்புக் கொண்டான். சிலமாதங்கள் சென்றன. நெல் பயிரிடும் காலம் வந்தது. கடன் காசைத் தருமாறு நம்பியிடம்

மயன் கேட்டான். நம்பியோ தான் பணம் கடன் பெறவில்லை என்று கூறினான்.

மயன் அந்த ஊர்த் தலைவரிடம் முறையிட்டான். தலைவர் இரு குடும்பத்தவர்களையும் வீட்டுக்குக் கூப்பிட்டார். இருவரது மனைவிமாரையும் அருகில் அழைத்தார். சம அளவாக அரிசி, காய்வகைகளை இருவருக்கும் கொடுத்தார். இருவருமே தனித்தனியே உணவு சமைத்து எல்லோருக்கும், தனக்கும் சேர்த்து விருந்து தர வேண்டும் என்றும் கூறினார். நம்பியின் மனைவி தனக்குக் கொடுத்த உணவுப் பொருட்களை நம்பியிடம் காட்டி இவ்வளவு பேருக்கும் இதில் எப்படி விருந்து பரிமாற முடியும் என்று சொல்லி யோசனையில் சமைக்காமலே இருந்து விட்டாள்.

மதனின் மனைவி சோறாக்கினாள். கறி சமைத்தாள். எல்லாவற்றையும் ஒரு பாத்திரத்திலிட்டுக் கலந்தாள். அங்கிருந்த ஆட்களின் எண்ணிக்கைக்குத் தக்கதாகப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டாள். பங்கிட்டுப் பாத்திரங்களில் போட்டு, எல்லோருக்கும் பரிமாறினாள். தலைவர் நம்பியைப் பார்த்து 'நீ தான் மதனுக்குக் காசு கொடுக்க வேண்டும். மதன் சிக்கனமாக வாழ்கிறான் என்பது அவனது மனைவியின் செய்கையிலிருந்து கண்டு கொண்டேன்" என்றார்.

நம்பியும் மனைவியும் உண்மையை ஒப்புக் கொண்டனர். அன்று முதல் அவர்களும் சிக்கனமாக வாழத் தொடங்கினார்கள்.

## கண்ணில்லாதவன்

உறையூர் எனும் நாட்டை நந்திவர்மன் என்பவன் ஆண்டு வந்தான். கொடைவள்ளலான அவனிடம் நாள்தோறும் புலவர்கள் வருவார்கள், கவி பாடுவார்கள், மன்னனும் பெரிய பெரிய மண்பானைகள் நிறைய நெல் தருவான்.



ஒருமுறை அவனைத் தேடி கண்ணில்லாப் புலவன் ஒருவன் வந்தான். மன்னனைப் புகழ்ந்து கவி பாடினான். மன்னனும் மனமகிழ்ந்து பானைகள் நிறைய நெல் கொடுத்தான். அப்போது படைத்தளபதி அங்கு

வந்து மன்னனிடம் அவர் விரும்பியபடி ஒரு குதிரை வாங்கி வந்திருப்பதாகச் சொன்னான்.

மன்னனும் மகிழ்ந்து அரண்மனையில் வீற்றிருந்தவர்களுடன் குதிரையைப் பார்க்கச் சென்றான் புலவனும் அவனுடன் சென்றிருந்தான். புலவன் அக்குதிரையின் கனைப்புச் சத்தத்தைக் கேட்டு விட்டு அது நல்லது அல்ல, தண்ணீரில் கால் வைக்காது, அதை வேண்டியவனிடமே திருப்பிக் கொடுத்து விடுங்கள் எனக் கூறினான். அரசனுக்கு அவன் கூறியதில் நம்பிக்கை இல்லாமலிருந்தாலும் சோதித்துப் பாரக்க எண்ணினான். அக்குதிரையிலேறி நதி ஒன்றின் பக்கம் போனான். என்ன அதிசயம்! குருட்டுப் புலவன் சொன்னது போல் குதிரை தண்ணீரில் கால் வைக்கவில்லை. புலவனிடம் திரும்பிச் சென்ற அரசன் புலவனைப் பாராட்டி இன்னும் பல பானைகள் நிறைய நெல் கொடுத்தான்.

அப்போது புலவன் நந்திவர்மனிடம், தனக்கு இன்னுமொரு முக்கியமான உண்மை தெரியுமெனக் கூறினான். அரசனும் ஆவலாக என்னவென்று வினவினான். புலவன் அவனிடம், "நீ அரசகுலத்தில் பிறந்தவனல்ல, ஓர் புலவனின் குடும்பத்தில் பிறந்தவன்" என்றான். முதலில் அரசன் கோபப் பட்டான், ஆனால் பின்பு தனது தாயாரிடம் சென்று இதைப்பற்றிக் கேட்டான்.

அரசியும் "புலவன் சொன்னது உண்மை தான். மகனே, எங்களுக்குக் குழந்தையே பிறக்காத காரணத்தினால் உன்னை ஒருவரிடம் சுவீகாரம் பெற்று மகனாக வளர்த்தோம். இதை இரகசியமாக வைத்திருந்தோம். ஆனால் இதை இப்புலவன் எப்படி அறிந்தான்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள். அரசன் புலவனை அழைத்து விஷயத்தைக் கேட்டான்.

புலவன் அரசனைப் பார்த்து "அரசே, நீங்கள் உண்மையில் எனது மகன். அதனாலேயே உங்கள் பிறப்பைப் பற்றிக் கூறினேன். குதிரையின் தன்மையை எப்படித் தெரிந்து கொண்டேன் என்றறிய ஆவலாக இருப்பீர்கள். உங்கள் தந்தையின் குதிரைப்படைத் தலைவனாக நான் இருந்தேன். குதிரையின் இனம், எந்த நாட்டைச் சேர்ந்தது என்பதும் எனக்குத் தெரியும். போரில் என் கண்ணிரண்டையும் இழந்து விட்டேன். இயற்கையாகவே கவி பாடும் ஆற்றலிருப்பதால் கவி பாடுகிறேன்" என்றான்.

✧மழைத்துளி வினாடியில் ஏழு மீற்றர் வேகத்துடன் பூமியை நோக்கி வருகின்றது.



சூரியனின் ஒளி நமது பூமியின் மீது படாமல் இருந்தால், பூமியின் சராசரி வெப்பம் **−73.**

# புல்லாங்குழல்



வன்னி நாட்டு அரசன் தன் நாட்டு மக்களை மிகவும் நல்லமுறையில் ஆட்சி செய்து வந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். இளவரசனான கபிலன் மூத்தவன். இளவரசி மாதினி இளையவள். கபிலன் தங்கை மீது மிகவும் அன்புள்ளவன்.மாதினி கண் கலங்கினால் அவன்

மனம் துடி துடித்துப் போவான். கபிலனுடைய பிறந்த நாளை அந்நாட்டு மக்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

அரசனோ தன் மகனுக்கு உயர்ந்த இனத்துக் குதிரையொன்றைப் பரிசாகக் கொடுத்தான். தங்கை மாதினியோ தன் அண்ணனான இளவரசனுக்குப் புல்லாங்குழலொன்று பரிசாகக் கொடுத்தாள். தங்கை தந்தது சிறு பொருளாக இருந்தாலும் கபிலன் அதை நன்றாகப் பேணிப் பாதுகாத்தான். அவனுடைய இடுப்புப் பட்டையில் அதைச் சொருகி வைத்திருந்தான்.

தங்கை கேட்கும் வேளையிலெல்லாம் சலித்துக் கொள்ளாமல் குழலூதி மகிழ்விப்பான். தங்கையைத் தன் குதிரையில் ஏற்றிக் கொண்டு சவாரி செய்து மகிழ்ந்தான். அண்ணன் மூலம் ஓரளவு குதிரைச் சவாரி செய்யவும் மாதினி அறிந்திருந்தாள். ஒருநாள் இளவரசன் அரசாங்க விடயமாக அயல்நாடு சென்றிருந்தான். மாதினிக்கு அண்ணன் இல்லாமல் பொழுதே போகவில்லை.

அண்ணனுடைய குதிரையில் ஏறிச்சவாரி செய்து கொண்டு நகரத்துக்கு வெளியே வந்தாள். குதிரைச் சவாரியிலேயே கண்ணாயிருந்ததால் வெகு தூரம் வந்து விட்டதை அவள் அறியவில்லை.

திடீரென்று தன் நினைவு வந்ததும் தான் காட்டுக்குள் நுழைந்து விட்டதை மாதினி உணர்ந்தாள். குதிரையைத் திருப்பினாள். அவளைச் சுற்றிக் காட்டுவாசிகள் நின்றிருந்தனர்.

அவளை அழைத்துக் கொண்டு நடுக்காட்டிலுள்ள மந்திரவாதியின் இல்லத்துக்குச் சென்றனர். அங்கே மந்திரவாதி கண்மூடி மந்திரம் செபித்துக் கொண்டிருந்தான். வந்திருப்பவள் அந்நாட்டு இளவரசி என்பதைத் தன் மந்திர சக்தியால் அறிந்து கொண்டு, அவளைப் பயணமாக வைத்திருந்தால் அரசனிடம் இருந்து நிறையப் பொன்னும் பொருளும் பெற்றுக் கொள்ளலாம் என்று எண்ணினான். அவளைச் சுற்றிக் காவலாளிகளை நிறுத்திக் காவல் காத்து வந்தான்.

இளவரசி காணாமற் போய் ஒரு வாரமாயிற்று. அரசாங்கக் காவலாளிகளும் அரசனும் நாட்டின் நாற்புறமும் இளவரசியைத் தேடினார்கள். நாட்டு மக்களும் அவர்களோடு சேர்ந்து தேடியும் இளவரசி கிடைக்கவில்லை. அயல் நாட்டுக்குச் சென்றிருந்த இளவரசன் தன் கைக்காக முத்துமாலை ஒன்றைப் பரிசாகக் கொண்டு வந்தான். தங்கையைக் காணவில்லை என்றதும் மிகவும் கவலைப் பட்டான்.

தன் குதிரையைத் தங்கை எடுத்துச் சென்றிருந்த படியால் வேறு ஒரு குதிரையை எடுத்துக் கொண்டு தங்கையைத் தேடிப் புறப்பட்டான். அவன் ஒருமுறை காட்டுப்பக்கமாகச் செல்லும் போது அவனுடைய குதிரையைக் கண்டான். குதிரை அங்கே இருப்பதால் மாதினியும் அங்கேயே இருப்பாள் என இளவரசன் நினைத்தான். அப்போது அவன் மந்திரவாதியின் வீட்டைப் பார்த்தான். வீட்டைச் சுற்றிப் பல காவலாளர்கள் நின்றிருந்தபடியால் இரவானதும் வீட்டிற்குள் நுழைந்தான்.

எல்லாரும் நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் ஒரு அறையில் மட்டும் யாரோ தேம்பித் தேம்பி அழும் குரல் கேட்டது. அழுது கொண்டிருந்த உருவத்தின் பக்கத்தில் சிறு அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சுற்றி வரக் காவலாளர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அகல்விளக்கின் வெளிச்சத்தில் அழுது கொண்டிருப்பது ஒரு பெண் என்பதை அறிந்தான். அது தனது தங்கை என்பது அவனுக்குத் தெரிந்தது.

ஆனால் அவளை இவ்வளவு காவலாட்கள் சுற்றி இருக்கிறார்களே? எப்படி வெளியே கொண்டு வருவது? அறைக்குள் சென்று அழைத்து

வருவதென்றால், இவ்வளவு காவலாளர்களுக்கு இடையேவா? பெயரைச் சொல்லிக் கூப்பிடலாம் என்றால் மற்றவர்கள் முழித்து விட்டால்? இரவு நேரம் என்பதால் வெளியே பூச்சிகளும் வண்டுகளும் சத்தம் போட்டுக் கொண்டிருந்தன.

இளவரசி விழித்துக்கொண்டுதானே இருக்கிறாள், குழலை மெதுவாக வாசித்தால் அவள் எழுந்து விடுவாள்தானே என நினைத்த கபிலன் அவ்வாறே செய்தான். மாதினி வந்திருப்பது அண்ணன்தான் என அறிந்து ஓசை வந்த் வழியே சென்றாள். அவள் வந்ததும் இளவரசன் அவளை அழைத்துக்கொண்டு குதிரைகள் நின்ற இடத்திற்குச் சென்றான். இருவரும் குதிரைகள் மீது ஏறி அவர்களது நாட்டுக்குச் சென்றான். இருவரையும் கண்டதும் அரசன் பெரு மகிழ்ச்சி அடைந்தான்.

-காந்தரூபன் சத்தியமூர்த்தி-



நாங்கள் வலது கையால் மட்டுமே எழுதப் பழகிக் கொள்கிறோம், ஆனால் ஜப்பான் சிறுவர்கள் இடது கையாலும் வலது கையாலும் எழுதப்பழகிக் கொள்கிறார்கள்.

# அழைக்கும் ரோஜா




வருக வருக என்கிறாய்
மகிழ்ச்சி பொங்க அழைக்கிறாய்
அருமை ரோஜா, நீயுமே
அழகுச் சிரிப்புச் சிரிக்கிறாய்

தொட்டுப் பார்க்க மென்மையாய்
பட்டுப் போல இருக்கிறாய்
மட்டில்லாத வாசனை
வாரி வாரி இறைக்கிறாய்

கண்ணைக் கவரும் உன்னை நான்
கண்டவுடனே கொய்யவும்
என்றன் தலையில் அணியவும்
இச்சை கொண்டேன், ஆயினும்

என்றன் தலையில் வைத்த பின்
எதிரில் காண இயலுமோ?
உந்தன் அழகு தெரியுமோ?
உனக்கே உயிரும் இருக்குமோ!



# அதிசய மோதிரம்

ரமா மதிவண்ணன், லலிதா தம்பதிகளுடைய மகளும் நிலாவுடைய அக்காவும் ஆவாள். ரமாவிற்கு பன்னிரண்டு வயது. ரமா முன்பு தனது தாத்தாவுடனே ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தாள். ஆனால் அவளது தாத்தா இறந்து விட்டதால், இப்போது அவள் அவளுடைய பெற்றோர்களுடன் வாழ வேண்டி இருந்தது. முன்பிருந்த ஊரைவிட்டு இவ்வூருக்கு வர ரமாவிற்குப் பிடிக்கவில்லை. அவர்கள் முன்பு இருந்த ஊர் எத்தனை அழகு. அமைதி. அவளுக்குத்தான் எத்தனை சினேகிதிகள்.

ஆனால் இப்போது இருக்கும் ஊரில் தனது பெற்றோர்களைத் தவிர வேறு யாரையும் தெரியாது. பள்ளியில் ஒருத்தரும் அவளுடன் கதைப்பதில்லை.



எப்பொழுதுமே பள்ளிக்குச் செல்லும்போதும் வரும்போது காடுபோன்ற பாதையில் தனியாக வருவாள்.

ஒருமுறை அவள் பள்ளிக்குச் செல்லும்போது வழியில் ஏதோ ஒன்று

மினுமினுத்தது. அது என்னவென்று பார்க்க அருகே சென்றாள். அது ஒரு மோதிரம். ரமா அதை எடுத்து விரலில் மாட்டிப் பார்த்தாள். என்ன அழகு! அதை மாட்டிக் கொண்டே பள்ளிக்குச் சென்றாள்.

பள்ளியில் அவளுக்கு இன்று முதல் பாடம் வரலாறு. வரலாறு ஆசிரியை மிகவும் நல்லவர். வரலாறு ரமாவிற்குப் பிடித்த பாடம். வேறு. ஆசிரியை கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் அவள் மட்டுமே பதில் சொன்னாள். ஆகவே அசிரியை பாடம் முடியும் நேரத்தில் மாணவர்களுக்கு 'ரமாவைப் பாருங்கள் எவ்வளவு கெட்டிக்காரி. அவள்போல கெட்டித்தனமாக இருக்க உங்களுக்கும் ஆசையில்லையா. இனிமேல் நீங்களும் அவளைப் போல இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்' என்றார் கண்டிப்பான குரலில்.

ஆசிரியை அப்படிச் சொன்னது வகுப்பில் இருந்தவர்களுக்குப் பிடிக்கவில்லை. குறிப்பாக மது. மாலா எனும் இரட்டைப் பிள்ளைகளுக்குப் பிடிக்கவில்லை. இரண்டு பேரும் பள்ளி முடிந்ததும் ரமாவின் அருகே சென்று 'எங்கிருந்தோ வந்து. எங்களைக் குறை சொல்ல வைக்கிறாயா?'

என்றார்கள். அதற்கு ரமா 'அப்படி ஒன்றும் இல்லையே. உங்களை அவர் நன்றாகப் படிக்கத்தானே சொன்னார்'' என்றாள்.

'எதிர்த்தா கதைக்கின்றாய்' என்றவாறே ரமாவின் கன்னத்தில் பளார் என்று மது அடித்தான். ரமா அவனைத் திரும்பிப் பார்க்காமல் வீட்டை நோக்கி நடக்கத் துடங்கினாள். செல்லும் போது தனது மோதிரத்தைத் திருப்பிக் கொண்டே மனதுக்குள் 'இந்த மது பொல்லாதவன். மோசக்காரன் இவன் என்னை அடித்ததற்குப் பதிலாக நானும் அவனை அடித்திருக்க வேண்டும் கடைசி கல்லாவாவது அவனுக்கு எறிந்திருக்க வேண்டும்' என நினைத்துக் கொண்டாள்.

அடுத்தநாள் பள்ளிக்கூடத்திற்குச் செல்ல மனம் இல்லாமல் பள்ளிக் கூடத்திற்குச் சென்றாள். பள்ளியில் மது தலையில் கட்டோடு வந்தது அவளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அது மட்டுமில்லாமல் அவன் தனது சிநேகிதர்களுக்குத் திடீரென நிலத்திலிருந்த கல் ஒன்று அவனது தலையில் வந்து விழுந்தது என்றானே! ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியத்தை ஊட்டியது.

பள்ளியை விட்டுச் செல்லும் போது தனது மோதிரத்தில் ஏதாவது மந்திர சக்தி இருக்குமோ எனும் சிந்தனைதான் ரமாவிற்கு. ஆகவே வீட்டிற்குச் சென்றதும் புதிதாக அவள் வாங்கிய ரோஜாச் செடியின் பக்கம் சென்று. இப்போது இந்த ரோஜாச் செடி பூக்க வேண்டும் என நினைத்துக் கொண்டாள். ஆனால் ஒன்றும் பூக்கவில்லை. பின்பு மோதிரத்தைத் திருப்பிக் கொண்டே ரோஜா பூக்க வேண்டும் என நினைத்துக் கொண்டாள். என்ன அதிசயம் அடுத்த கணம் ரோஜா பூத்துக் கிடந்தது.

(தொடரும்)

## ஆதவன் மாமா எழுதுகிறேன்

"அமுதம்" சிறுவர்களுக்கு,

ஆதவன் மாமா இப்பொழுது "சினிமா" பற்றிய நூல்கள் வாசித்துக் கொண்டிருக்கிறார். அதனால் அவரால் உங்களுக்கு ஒன்றும் எழுத முடியவில்லை.

நீங்கள் "சார்லி சாப்ளினை"த் தொடராக வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள். அவரைப் பற்றியெல்லாம் உங்களுக்குத் தெரியாத உண்மைகள் மறைந்து போய் இருக்கின்றன.

"காந்தி"யைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள், அவரைச் சுட்டவர் "கோட்சே" எனும் பெயர் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆனால் சுட்டவன் எதிரி என்பதே உங்கள் கணிப்பாக இருக்கும். "கோட்சே"யைப் பற்றி நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள்.

நீங்கள் ஐரோப்பாவில் மிகுந்த விஞ்ஞான அறிவோடு வாழ்ந்து கொண்டிருக்கும் குழந்தைகள்.

உங்களது அறிவில் இருந்து உங்களது பெற்றோர்கள் கற்க வேண்டிய விஷயங்கள் நிறைய உண்டு.

உதாரணமாக டீனோசௌரியாவின் இறப்பும் அதைப் பற்றிய விஷயங்களும், இவைகளைப் பற்றி உங்களது பெற்றோர்கள் அக்கறைப் படுவதாக இல்லை.

உங்கள் உணர்வுகளை.... சுதந்திரமாக யாரும் விடுவதாயில்லை. எல்லா விதத்தாலும் நீங்கள் நெருக்கப் பட்டுக் கொண்டுதான் வருகிறீர்கள்.

இப்போது இந்த ஆதவன்மாமாவுக்கு ஓய்வு தாருங்கள். நான் அவ்வப்போது அறியும் விஷயங்களை உங்களுக்குச் சொல்லிக் கொண்டே இருப்பேன்.

அன்புடன்

ஆதவன் மாமா

# வினாவிடைப் போட்டி

1. 1896ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி எந்த நாட்டில் நடைபெற்றது?

*ஏக்கம். தென்கிழக்கு. அன்னம். கஸ்தூரி*

2. பறவையினமாக இருந்தும் பறக்க முடியாத பெரியபறவை எது?

*தீங்கு. பக்கம். முன்கோபம். பழிச்சொல்*

3. ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் இல்லத்தின் பெயர் என்ன?

*அன்னம். இலங்கை. பரிதாபம். சன்மானம். தளிர். பகை*

4. நம் தமிழ் மொழியைப் போல பழமையான மொழி மட்டுமல்ல, வளர்ச்சி பெற்ற மூன்று நாடுகளில் பேசப்படும் மொழி இது?

*ஜேம்ஸ்நதி. ஊர்தி. மாமரம். அன்பு. மொட்டு. அழி*

5. நாடு கடத்தப் பட்டு உயிரிழந்த பெர்டினாண்ட் மார்கோஸ் எந்த நாட்டின் ஜனாதிபதியாவார்?

*பிரிவினை. மலிவு. நெருப்பு. பெட்டி. பணப்பை. யன்னல். ஸ்பெயின்*

முடிவுதிகதி: 20.5.95

## சார்லி சாப்ளின்



ஆண்டர்ஸன் மறுத்து விட்டது சார்லிக்குப் பெரும் கவலையாக இருந்தது. "இருபத்தையாயிரம் டொலர் பணத்தை விடச் சொல்கிறீகளே? உங்களின் ஒப்பந்தத்துக்கு எந்த விதப் பழுதுமின்றி நான் செய்வேன்" என்று பலவிதமாகச் சமாளித்துப் பார்த்தார் சார்லி. ஆண்டர்ஸனோ சார்லியைப் பார்த்து "சார்லி, எஸ்ஸெனே நிறுவனத்துக்கு இரண்டு சுருள் படத்தை முடித்துக் கொடுத்து இரண்டாயிரம் டொலர் பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று வற்புறுத்திக் கூறினார்.

மறுநாட் காலையே ஆண்டர்ஸன் சார்லியிடம் வந்து இரண்டாயிரம் டொலர் பணத்தைக் கையளித்தார். சார்லிக்கு மனம் சங்கடமாக இருந்தது. ஆனால் சிலநாட்களின் பின் தான் தப்பிக் கொண்டதை உணர்ந்து கொண்டார். இருபதாயிரம் டொலர் தருவதாகச் சொன்ன நிறுவனம் நஷ்டப்பட்டு இடைநிறுத்தம் செய்யப் பட்டதாக அறிந்தார். தான் அதிலிருந்து தப்பிக் கொண்டதை நினைத்துச் சந்தோஷப் பட்டார்.

சார்லி சாப்ளினின் அண்ணனான சிட்னி சாப்ளின் மாக்சென்னட்டின் கீஸ்டோன் ஸ்டோன் படநிறுவனத்திலேயே வேலை செய்து வந்தார். அண்ணனைச் சந்திக்கச் சார்லி அடிக்கடி வரமுடிவதில்லை. சிட்னி ஓய்வு நேரங்களில் சார்லியின் படங்களைத் திரையிடும் அரங்குகளைக் கவனித்துப் பார்ப்பார். அங்கு வரும் திரண்ட மக்கள் கூட்டத்தைக் கண்டதும் தன் சகோதரனுக்குப் பெருகி வரும் ஆதரவைக் கண்டு பிரமித்துப் போவார்.

சார்லியை ஒருதரம் சந்தித்தபோது சார்லியிடம் இதைச் சொல்லி ஆனந்தப்பட்டார். அது மட்டுமல்லாமல் ஆண்டர்ஸனிடமும் புகழ்ந்து கொண்டார். சின்னத் திரைகளில் திரையிடுவதை விடுத்து பெரிய அரங்குகளில் திரையிடப் பட்டால் அதிக இலாபத்தைச் சம்பாதிக்கலாம். அதன்படி ஒருபடத்துக்கு நூறாயிரம் டொலர்கள் அதிகமாகக் கிடைக்கும் என்றும் ஆலோசனை கூறினார். ஆனால் ஆண்டர்ஸனோ அதைப் பெரிதாகக் காதில் வாங்கிக் கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

அடுத்த இரண்டொரு நாட்களிலேயே ஹேரால்டு பத்திரிகையில் வெளிவந்த செய்தி, சிட்னியின் ஆலோசனையை முழுதாக ஏற்றுக் கொண்டதை அறிவித்தது. எஸ்ஸென்னே நிறுவனத்தினர் பழைய படவினயோக முறையைக் கைவிட்டு, புதியமுறையில் வினயோகம் செய்வதாகவும், இதனால் சார்லியின்

ஒவ்வொரு படங்களும் நூறாயிரம் டொலர்கள் வரை சம்பாதிக்க முடியும் என்றும் பத்திரிகையில் வெளிவந்திருந்தது. சார்லியின் மனம் பரவசத்தில் ஆழ்ந்தது.

ரால்டு பத்திரிகையில் வெளிவந்த செய்தி, சிட்னியின் ஆலோசனையை முழுதாக ஏற்றுக் கொண்டதை அறிவித்தது. எஸ்ஸென்னே நிறுவனத்தினர் பழைய படவினயோக முறையைக் கைவிட்டு, புதியமுறையில் வினயோகம் செய்வதாகவும், இதனால் சார்லியின் ஒவ்வொரு படங்களும் நூறாயிரம் டொலர்கள் வரை சம்பாதிக்க முடியும் என்றும் பத்திரிகையில் வெளிவந்திருந்தது. சார்லியின் மனம் பரவசத்தில் ஆழ்ந்தது.

–வளரும்–

கல்வியின் வேர் கசப்பானது; கனி இனிப்பானது.
–கிரீஸ்–

மாணவர்களே பிற்கால ஆசிரியர்கள்.
–இந்தியா–

இருவர் குதிரையில் ஏறினால், ஒருவர் பின்னால் அமர வேண்டும்.
–இங்கிலாந்து–

## ஔவையார்



ஔவையார் குறமகள் வீட்டிலிருந்து தன் யாத்திரையை மேற்கொண்டார். குமரிக்கரை தாடகமலை அடிவாரத்தில் ஓடிக் கொண்டிருக்கும் தோவாளை ஆற்றங்கரைக்கு வந்தார். அவ்வாற்றங்கரையில் நின்றிருந்த நாவல்மரத்தடியில் இளைப்பாறினார். அவருக்குப் பக்கத்தில் ஒரு எருமைமாடு ஒன்று படுத்திருந்தது. மரத்தின் மேல் சலசலக்கும் சத்தம் கேட்டது.

மேலே அண்ணாந்து பார்த்தார் ஔவையார். மாடு மேய்க்கும் சிறுவன் மேலே கிளையில் இருந்து கொண்டு நாவற்பழம் பறித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஔவையார் அவனைப் பார்த்து "சிறுவனே, எனக்குப் பசிக்கிறது. எனக்கும் பழம் பறித்துப் போடுகிறாயா?" என்று கேட்டார். சிறுவன் ஔவையாரைப் பார்த்து, பாட்டி, உங்களுக்குச்

சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா? என்று சிரித்துக் கொண்டு கேட்டான்.

"நாவற்பழத்தில் அப்படி இரண்டு இனம் இருக்கிறதா? எனக்குச் சுடாத பழங்கள் வேண்டும்" என்று சிறுவனின் குறும்புத்தனத்தை இரசித்தவாறே ஔவையார் கூறினார். "கிளையைக் குலுக்குகிறேன். சுடாதபழங்களைப் பார்த்து எடுத்துச் சாப்பிடுங்கள். சரிதானா பாட்டி?" என்றவாறே கிளைகளைக் குலுக்கினான். பழங்கள் கீழே விழுந்தன. நன்றாகப் பழுத்த பழங்களைப் பொறுக்கினார்.

பழங்களில் நன்றாகப் பழுத்ததை எடுத்துக் கொண்டார். பழங்களில் மண் ஒட்டியிருந்தது. மண்ணைப் போக்குவதற்காக வாயால் ஊதிப் பழங்களைச் சாப்பிட்டார். சிறுவன் பலமாகச் சிரித்தான். ஔவையாரைப் பார்த்து "பாட்டி, சுடாத பழங்கள் வேண்டுமென்றீர்களே! பழம் சுடுகிறதா? வாயால் ஊதி ஊதிச் சாப்பிடுகிறீகளே" என்று கேட்டான். எவ்வளவோ பெரிய புலவர் என்று பேரெடுத்த ஔவையார் சிறுவனின் முன் தன் அறிவு தாழ்ந்து விட்டதையறிந்து வெட்கப்பட்டார்.



சிறுவன் ஒளவையாரைப் பார்த்து "தமிழ் மூதாட்டி என்று பேர் பெற்ற பாட்டி நீங்கள் தானே! உங்களிடம் எனது சந்தேகங்களைக் கேட்க வேண்டும். பாட்டி, உலகத்தில் கொடியது எது? இனியது எது? அரியது எது? அரியது எது? என்று கேட்டான். ஒளவையார் உலகத்தில் வறுமை கொடியது. அமைதியான சூழலே இனிமையானது. நல்ல மனிதர்களாக வாழ்வது அரிது (கஷ்டம்.) . மக்களுக்குத் தொண்டு

செய்பவர்களின் பெருமையே எல்லாவற்றிலும் பெரியது" என்று பதில் கூறினார்.

சிறுவனும் ஔவையாருக்கு நன்றி கூறினான். ஔவையார் அவனை அன்போடு பார்த்தார். "உன்னைப் பார்த்தால் மாடு மேய்க்கும் சிறுவனாக எனக்குத் தெரியவில்லை. நான் வணங்கும் முருகனையே உன் வடிவில காண்கிறேன்." என்று அவனைப் புகழ்ந்தார்.

அந்த இடம் இப்பொழுது முப்பந்தல் என்று அழைக்கப்பட்டு வருகிறது. ஔவையார் அவ்வூரிலேயே கடைசிக் காலத்தில் வாழ்ந்திருக்கிறார் என்று ஆராச்சியாளர் சொல்கிறார்கள். இங்கு ஔவையாருக்குக் கோயில் அமைத்திருக்கிறார்கள். இவ்வூருக்கு அருகில் வேறும் இரண்டு கோயில்கள் ஔவையாருக்கு உண்டு.

-தொடரும்-

நல்லவரோடு நட்புக்கொண்டிரு. அப்படி இருப்பதன் மூலம், நீயும் அவர்களில் ஒருவனாக நாளடைவில் ஆகி விடுவாய்.

-ஜோர்ஜ் ஹெர்பர்ட்-

# விந்தைச் செய்திகள்

பூச்சிகளின் கண்ணமைப்பு மனிதனின் கண் அமைப்பில் இருந்து வேறுபட்டது. மனிதனது ஒரு கண், ஒரு கண் வில்லையை உடையது. அதனால் ஒரே நேரத்தில் ஒரு திசையில் மட்டும் பார்க்கக் கூடியதாகவுளது. ஆனால் ஒரு சில பூச்சிகளுக்கு ஒரு கண்ணே பல கண்வில்லைகளைக் கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக ஒரே நேரத்தில் பல திசைகளில் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இத்தகைய பூச்சிகள் கிட்டத்தட்ட 1000 கண் வில்லைகளை உடையன. Raupfliege(D) எனும் பூச்சி 12.000 திசைகளில் பார்க்கக் கூடியது.

---

முதலை குளிரான இரத்தத்தையே கொண்டது. இதனால் தான் முதலைகள் வெப்பமான சூழலியே வாழ்கின்றன. அத்துடன் சூழலின் வெப்ப தட்ப நிலையைச் சார்ந்தே அது வாழ்கின்றது. இதனால் தான் நீர்நிலைகளிலும் தரையிலும் வாழ்கின்றது. நீர்ப்பரப்பில் குளிர் அதிகமானால் தரைக்கு வரும். தரையில் வெப்பம் அதிகமாயின் நீர்ப்பரப்பிலும் குளிரான நிழலிலும் இருக்கும். ஆனால் Alliator எனும் முதலை குளிரான காலநிலையில் வாழ்கின்றது. பொதுவாக ஊர்வனவற்றுக்கு சிறிய மூளையே

இருக்கின்றது. ஆனால் முதலைக்கு பெரிய மூளை இருப்பதுடன் புத்திசாலித்தனமானதும் ஆகும்

புலி, பூனை என்பன தாம் வேறு இடம் செல்லும் போது தம் குட்டிகளை தம் வாயில் கௌவிக் கொண்டே செல்லுகின்றன. கங்காரு தன் குட்டியை தன் உடலில் இருக்கின்ற பையில் கொண்டுசெல்லுகின்றது.ஆனால் வடஅமெரிக்காவில் வாழ்கின்ற Opossumஎனும் விலங்குதன் குட்டிகளைத் தன் வாலில், குட்டிகளின் வாலைச் சுற்றி, குட்டிகளைத் தன் முதுகில் கொண்டு செல்கின்றது. இது ஒரேதடவையில் இருபதிற்கு மேற்பட்ட குட்டி களை ஈனுவதாயினும் அனைத்தும் உயிர் வாழ்வதி ல்லை.

உலகிலே கூடிய குழந்தைகளைப் பெற்றெடுத்தவர் யார்?

பதினெட்டாம் நூற்றாண்டில் அதிகமான குழந்தைகளைப் பெற்றவர் ரஸ்சிய நாட்டைச் சேர்ந்த ஒரு கமக்காரப் பெண் ஆகும். இவர் 69 குழந்தைகளைப் பெற்றெடுத்தார். பதினாறு தடவைகள் இரட்டைக் குழந்தைகளாகவும், ஏழு தடவைகள் முக்குழந்தைகளாகவும் நாலு தடவைகள் நாற்குழந்தைகளாகவும் பெற்றெடுத்தார். கடந்த

ஆண்டு Denmark நாட்டில் ஒரு பெண் ஒரே தடவையில் 12 குழந்தைகளைப் பெற்றெடுத்தார்.

பிள்ளைகளே! ஆயுர்வேத வைத்தியம் என்று கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? ஆயுர்தேவ வைத்திய முறை என்பது இயற்கையிலிருந்து கிடைக்கும் மூலிகைகளைக் (மருந்தாகப் பயன்படும் தாவரம், அல்லது தாவரத்தின் இலை, பட்டை, வேர் போன்றன) கொண்டு மருந்து வகைகள் செய்து அவற்றின் மூலம் நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் முறையாகும். இவ்வைத்திய முறை கி.மு. 500 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் உருவானது. இம்முறையின் மூலமும் சத்திர சிகிச்சையும் (அறுவை வைத்தியம்) செய்தார்கள். இவ் வைத்திய முறையினால் ஒரு நோய் மாறுவதற்கு நீண்டுகாலம் எடுக்கும். இதனால் நோய் முற்றாக மாறுவதுடன் பக்கவிளைவான நோய்களும் வரமாட்டாது. இவ் வைத்தியமுறை இன்றும் இலங்கை, இந்திய நாடுகளில் பயன்பாட்டில் உள்ளது.

---

உலக மக்கள் தொகையில் இருபது சதவீதத்தினரே பணக்கார நாடுகளில் வாழ்கின்றார்கள். இவர்கள் உலக வளங்களில் எண்பது சதவீதத்தை அனுபவிக்கின்றார்கள். மீதியாகவுள்ள இருபது

சதவீதத்தையே எண்பது சதவீதமான மக்கள் அனுபவிக்கின்றார்கள். இதுவும் உலகில் வறுமையான மக்கள் தொகை அதிகரிப்பதற்கும் காரணமாகும்.

ஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒ

## நன்றி மறந்த மனிதன்

வேடன் காட்டு வழியாக அடுத்த கிராமத்துக்குப் போய்க் கொண்டிருந்தான். அவன் போய் கொண்டிருந்த வழியில் ஒரு புலி திறந்த வாயுடன் எதிரே நின்றது. புலியின் நிலையைக் கண்டதும் வேடனுக்கு அது பசியுடன் இருப்பது விளங்கி விட்டது. நான் இன்று இந்த வழியால் போனால் புலியின் வாயில் அகப்பட்டு இறப்பது திண்ணம். ஆனால் அந்த வழியால் மட்டுமே அடுத்த கிராமத்திற்கு போகலாம். வேறு வழியில்லை. எனவே அவன் தன் கிராமத்திற்கு திரும்பிப் போனான்.

இதனைக் கவனித்த புலி அவனைப் பின் தொடர்ந்து ஓடி வந்தது. வேடன் தன்னைத் தொடர்ந்து புலி ஓடி வருவதை சத்தத்திலிருந்து தெரிந்து கொண்டான். அவன் காட்டுவழியாக ஐயோ! கடவுளே! என்னைக் காப்பாற்று எனக் கூறியவாறு ஓடினான். கீழே கிளையுள்ள ஒரு மரமும் அவனுக்கு அகப்படவில்லை. விரைவாக ஓடினான். தொலைவில் ஓர் ஆலமரத்தைக் கண்டான்.

வேகமாக ஓடிச் சென்று ஆலமர விழுதினைப் பிடித்து ஆலமரத்தில் ஏறிக் கொண்டான். அம் மரத்தில் குரங்கும் அதன் குட்டியும் இருந்தன. குரங்கு வேடனைப் பார்த்து, நான் உன்னைப் பாதுகாக்கின்றேன். நீ பயப்படாமல் இரு, என்று ஆறுதல் கூறியது.

புலி குரங்கைப் பார்த்து, குரங்கே நான் உன்னையும் உனது குட்டியையும் ஒன்றும் செய்யவில்லை. அந்த மனிதனைக் கீழே தள்ளி விடு. எனக்கு கொடிய பசியாக இருக்கின்றது. இந்த உதவியை நீ எனக்குச் செய் என்று கெஞ்சிக் கேட்டது.

அதற்கு குரங்கு புலியாரே! முடியாது. ஒரு வகையில் இவன் என்னிடத்தில் சரண் புகுந்துள்ளான். அவனுக்கு நான் துரோகம் செய்யமாட்டேன். எனவே உனக்கு உதவி செய்ய என்னால் முடியாது என்று புலியிடம் மறுத்துக் கூறியது. புலியும் மரத்தின் அடியில் படுத்துக் கிடந்தது. மனிதன் எப்படியும் கீழே இறங்கித்தானே ஆக வேண்டும் என்ற நம்பிக்கையுடன் அந்த மரத்தின் அடியை விட்டு விலகாது காத்துக் கொண்டிருந்தது.

நீண்டநேரமாகிவிட்டது. வேடனும் பசியால் களைத்து சோர்ந்து விட்டான். இதனைக் கண்ட குரங்கு அவன்மீது இரக்கப்பட்டது. குரங்கு மனிதனைப் பார்த்து நீ கீழே இறங்கிவிடாதே. என்

குட்டியை மட்டும் பார்த்துக் கொள். நான் கீழே இறங்காமல் மரத்துக்கு மரம் தாவிப் போய், அயலில் இருக்கின்ற வாழைத்தோட்டத்தில் சில பழங்கள் எடுத்துக் கொண்டு வருகின்றேன் என்று கூறி விட்டு மற்ற மரத்தக்குத் தாவிச் சென்றது.


இதனைக் கண்ட புலி ஏ! மனிதனே, நான் உன்னை ஒன்றும் செய்யவில்லை. அந்தக் குரங்குக் குட்டியைக் கீழே தள்ளி விடு. அதனைச் சாப்பிட்டுவிட்டுப் போகின்றேன் என்று கூறியது. உடனே வேடன் தன் சுயநலத்தைக் கருதி நன்றியை மறந்து, குரங்குக் குட்டியைக் கீழே தள்ளி விட்டான். புலியும் குரங்குக் குட்டியை வாயில் கௌவிக் கொண்டு அவ்விடத்தை அகன்று சென்றது. வேடனும் உடனே மரத்திலிருந்து கீழே இறங்கிச் சென்று விட்டான். பிள்ளைகளே! இக்கதை உங்கள் நெஞ்சை உருக்கவில்லையா? ஒரு விலங்கின் செயல் எப்படி? ஆறு அறிவு உள்ள மனிதன் செய்த செயல் எப்படி?

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

(திருக்குறள்–செய்நன்றியறிதல்)

*(நன்றி மறப்பது நன்று அன்று. நன்று அல்லாததை அன்றே மறப்பது நன்று)*

ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லது அல்ல. அவர் செய்த தீமையை உடனே மறப்பது நல்லது.


ஈழம்
எங்கள்
நாடென்போம்!
இதையே
தினமும்
பாடென்போம்!
-சின்ன இராஜேஸ்வரன்-
Siruvar Amutham
Im Winkel-2
50189 Elsdorf
Tel.: 022271/66527
Konto Nr. 1146023746
BLZ 37050299